# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 035/மா/2019**
**ஆணை நாள்: 27–2–2020**

திருமதி A.R. சுஜாதா,
சென்னை – 600 040. **– முறையீட்டு மனுதாரர்**

1. மண்டல அலுவலர்,
   மண்டலம் -08,
   பெருநகர சென்னை மாநகராட்சி.

2. செயற் பொறியாளர்,
   மண்டலம் 8,
   பெருநகர சென்னை மாநகராட்சி. **– எதிர் மனுதாரர்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணா நகர், சாந்தி காலனி, எண்.AB-123, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. A.R. சுஜாதா என்பவரது 26.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு; 26.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.035/மா/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் 26.02.2019 நாளிட்ட தனது மனுவில், சென்னை – 40, அண்ணாநகர் சாந்தி காலனியில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் தரைத் தளத்தில் AB-123 எண்ணிட்ட 852 சதுர அடி குடியிருப்பு பகுதியுடன் சேர்ந்து 1775 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம் தனக்கு சொந்தமானது என்றும், மேற்படி நிலம் உள்ள சர்வே எண்.109 (Part) நடுவக்கரை கிராமத்திற்கு உட்பட்டது என்றும், திரு. L.B. செந்தில் குமார் என்பவர் அதே குடியிருப்பு அடுக்குமாடி கட்டிடத்தில் முதல் மாடியில் AB-126 எண்ணிட்ட 801 சதுர அடி குடியிருப்பு பகுதியுடன் சேர்ந்து 1775 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்தினை கிரயம் பெற்றுள்ளார் என்றும், அந்த அடுக்கு மாடி கட்டிடத்தின் பிரிக்கப்படாத பங்கு நிலம் முழுவதும் அதன் நான்கு குடியிருப்புதாரர்களுக்கும் உரிமையானது என்றும், திரு. L.B. செந்தில் குமார் என்பவர் நான்கு பேருக்கும் சொந்தமான மேற்படி நிலத்தில் மாநகராட்சியின் கட்டிட அனுமதியின்றி இரண்டு அடுக்கு மாடி கட்டிடம் கட்டி திரு. செந்தில் மெஸ் என்ற பெயரில் உணவகம் நடத்திவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் தனது மனுவில் திரு. L.B. செந்தில்குமார் என்பவருக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் C.S.No.889 / 2017 என்ற வழக்கு தொடர்ந்து இடைக்கால உறுத்துக் கட்டளை (interm injunction) பெற்று, 14.11.2017 அன்று முதல் நடைமுறையில் உள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் (1) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (2) பெருநகர சென்னை மாநகராட்சி (3) மண்டல அலுவலர், மண்டலம்-08, பெருநகர சென்னை மாநகராட்சி (4) திரு. L.B. செந்தில் குமார் ஆகியோரை எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டு மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P. No.29570 of 2017ன்படி வழக்கு தொடர்ந்ததாகவும், அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்:–

"Majesty of the Court, has to be respected by all, though not a party to an order. Therefore, we are of the view that no sooner the official respondents 1 to 3 are brought to the notice of the order of this court in OA No.1144 of 2007 in C.S.No.889 of 2017 dated 14.11.2017 due respect has to be given and accordingly, action be taken. Respondents 1 to 3 should not act contrary to the above said order. Aiding or violating the orders of this court would attract, provisions of the Contempt of Courts Act, 1971. Respondents 1 to 3 to act, in conformity with the orders of this court, in OA No.1144 of 2017 in CS No.889 of 2017 dated 14.11.2017".

மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் நேரடி ஆய்வு மேற்கொண்டு கட்டிட அனுமதி வரைபடம் சமர்ப்பிக்க தெரிவித்து தனக்கும், திரு. L.B. செந்தில் குமார் என்பவருக்கும் தாக்கீது வழங்கப்பட்டது என்றும், தான் வரைபட நகலை வழங்கியதாகவும், தனது வீட்டின் முன்பகுதியில் தான் அமைத்திருந்த தற்காலிக கட்டுமானத்தை அகற்றிவிட்டதாகவும், ஆனால் திரு. செந்தில் குமார் தொடர்ந்து கட்டுமான பணியினை செய்து வருவதாகவும், மாநகராட்சியால் திரு. செந்தில் குமார் என்பவருக்கு தமிழ்நாடு சட்டம் 61/2008ன் படி திருத்தம் செய்யப்பட்ட, தமிழ்நாடு ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 85ன் படி இருப்பிடம் காலி செய்ய தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்றும், இதனை எதிர்த்து திரு. செந்தில் குமார், அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, அவர்களிடம் மேல் முறையீடு செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 07.03.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி 8-வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி, மண்டல அலுவலர் 25.5.2019 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் தல ஆய்வு செய்யப்பட்டு, கட்டிடம் கட்டிவரும் திரு. L.B. செந்தில்குமார் என்பவருக்கு தமிழ்நாடு சட்டம் 61/2008ன்படி திருத்தம் செய்யப்பட்ட, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 85ன்படி கட்டடம் கட்டும் வேலை நிறுத்துவதற்கான தாக்கீது வழங்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து கட்டிடம் கட்டும் பணியினை தொடங்கியதால் மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிடுதல் மற்றும் கட்டிடத்தை இடிப்பதற்கான அறிவிப்பு 05.04.2018ன்படி வழங்கப்பட்டது என்றும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.W.P.No.29570 / 2017-ல் வழங்கிய தீர்ப்புரையின்படி திரு. L.B. செந்தில்குமார் என்பவருக்கு கட்டிடத்திலிருந்து வெளியேறுவதற்கான (DeOccupation Notice) 17/11/2018 அன்று வழங்கப்பட்டது என்றும், அதனை எதிர்த்து அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அவர்களிடம் மேல் முறையீடு செய்துள்ளார் என்றும், மேல் முறையீட்டு அலுவலரிடம் இருந்து பெறப்படும் உத்தரவின்படி மாநகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 4.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 25.11.2019 அன்று முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில், திரு. செந்தில் குமார் என்பவர் அண்ணாநகர், சாந்தி காலனி, 4-வது அவின்யூ, AB 126-ல் உள்ள சொத்தில் பிரிவுபடாத அடி மனையுடன் சேர்ந்து 2017-ல் கிரையம் பெற்றதாகவும், இதில் நான்கு வீடுகள் உள்ளது என்றும், இதில் மூன்று உரிமையாளர்களிடம் உரிய அனுமதி ஏதுமின்றி திரு. செந்தில் குமார் பொது உபயோகத்திற்கான இடத்தில் கட்டிடம் கட்ட ஆரம்பித்தார் எனவும், தான் திரு. செந்தில்குமார் என்பவர் மீது C.S.No.889/2017ன்படி வழக்கு தொடர்ந்து OA No.1144 of 2017 in C.S No.889/2017-ன்படி இடைக்கால தடையாணை பெற்றதாகவும், அந்த தடையாணை நீட்டிக்கப்பட்டு தற்பொழுதுவரை தடை ஆணை நடைமுறையில் உள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும், தான் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில், சென்னை மாநகராட்சி ஆணையர், 8-வது மண்டல அலுவலர், செயற் பொறியாளர் ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டு, திரு. செந்தில் குமார் பொது இடத்தில் கட்டிடப் பணி தொடரக்கூடாது என கோரி W.P.No.29570/2017 என்ற வழக்கு தொடர்ந்ததாகவும், அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து மாநகராட்சி உதவி செயற் பொறியாளர், தங்கள் இருவரது இடத்தையும் ஆய்வு செய்து இருவருக்கும் பூட்டி முத்திரையிடுவதற்கான அறிவிப்பு வழங்கினார்கள் என்றும், அதன்படி தான் அமைத்திருந்த அலுவலகம் தன்னால் அகற்றப்பட்டது என்றும், திரு. செந்தில் குமார் என்பவர் மேற்படி இடத்தில் கட்டியுள்ள கட்டிடத்தில் Lift வசதி செய்தும், குளிர்சாதன வசதி செய்தும் திரு. செந்தில் மெஸ் என்ற பெயரில் உணவகம் நடத்தி வருகிறார் என்றும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது 8-வது மண்டல அலுவலர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிர் உறுதி ஆவணத்தில் மாநகராட்சியால் இந்த ஒட்டல் நடத்துவதற்கும், தொழில் தொடங்கும் உரிமையும் உதவி வருவாய் அலுவலரின் 8.11.2019 நாளிட்ட கடிதத்தில் மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், 17/5/2018 நாளிட்ட மாநகராட்சியின் அறிவிப்பிற்கு பின், திரு. செந்தில்குமார் தற்பொழுது திரு. செந்தில்குமார் என்ற ஒட்டலை மூடிவிட்டு போர்டு மாற்றி கொங்கு நாட்டு தோட்டத்து விருந்து ஒட்டல் என்ற பெயரில் வாடகைக்கு விட்டுள்ளார் என்றும், வாடகைக்கு எடுத்தவர் எந்தவித இடையூறும் இல்லாமல் மாநகராட்சியின் உதவியுடன் நடத்தி வருகிறார் என்றும், மேலும் தான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P.No.29936/2019-ன் தீர்ப்புரை 13.11.2019 அன்று வழங்கப்பட்டு நகல் பெறப்படும் நிலையில் உள்ளது என்றும் ஆணை நகல் பெற்றதும் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்து, திரு. செந்தில் குமார் ஏற்கனவே நடத்தி வந்த ஒட்டல் மற்றும் தற்பொழுது நடத்திவரும் ஒட்டல் நிழற் படங்களையும் சமர்ப்பித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 04.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி மாநகராட்சியின் சார்பாக 8வது மண்டல செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் 25.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளித்தார்கள். செயற் பொறியாளர் திரு. ந. வைத்தியலிங்கம் தனது வாக்குமூலத்தில் தான் கடந்த ஒன்றரை மாதங்களாக செயற்பொறியாளராக பணிபுரிவதாகவும், திருமதி. சுஜாதா மனு சம்மந்தமாக திருமதி. சுஜாதாவுக்கோ, திரு. செந்தில் குமாருக்கோ தன்னால் எந்த அறிவிப்புகளும் வழங்கப்படவில்லை என்றும், திருமதி. சுஜாதா தொடர்ந்த வழக்கில் 13.11.2019 அன்று விசாரணை முடிவுற்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்தார். உதவிப்பொறியாளர் திரு. ந. சேகர், அளித்த வாக்குமூலத்தில் திருமதி. சுஜாதா என்பவரது புகார் மனு விபரம் தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள அறிவிப்புகள் வழங்கப்பட்ட காலங்களில் தான் உதவி பொறியாளராக இருந்ததாகவும், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கோரும் பதில்கள் தற்போது தன்னிடம் இல்லை என்றும், 28.11.2019 அன்று உரிய ஆவணங்கள், ஆதாரங்களோடு ஆஜராவதாகத் தெரிவித்தார். அதன்படி, திரு. ந. சேகர், உதவிப் பொறியாளர், 28.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த

வாக்குமூலத்தில் திரு. செந்தில்குமார் என்பவருக்கு, அவரது விதி மீறல் கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திருத்திய சட்டம் 61/2008, பிரிவுகள் 56, 57 மற்றும் 85ன்படி அறிவிப்புகள் வழங்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து பிரிவு 49-ன் கீழ் பூட்டி சீல் வைப்பதற்கான அறிவிப்பும் வழங்கப்பட்டது என்றும், அந்த அறிவிப்பில் முதல்தளம் மட்டும் 73.66ச.மீ அளவிற்கு அனுமதி பெற்று அதற்கு மாறாக தரைதளத்தில் 120.42 ச.மீ, முதல் தளத்தில் 120.4 ச.மீ, இரண்டாம் தளத்தில் 120.42. ச.மீ. அங்கீகாரம் அற்ற நிலையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது, என்றும், மனுதாரரிடம் இருந்து எந்த பதிலும் இல்லாத நிலையில் 24/11/2017, 17/5/2018, 5.4.2018 தேதிய அறிவிப்புகளை குறிப்பிட்டு கட்டிடத்தில் இருந்து அவர்கள் காலி செய்ய வேண்டும் என அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும், அதில் 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது என்றும் அந்த இடம் வீட்டு வசதி வாரியம் மேம்படுத்தி கொடுத்த இடமாகும் என்றும், அது குடியிருப்பு பகுதியாக வகைப்படுத்தப்பட்டது என்றும், அது முற்றிலும் குடியிருப்பு பகுதியாகும் என்றும், ஆனால் வணிகத்திற்காக பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், திரு. செந்தில்குமார் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் உணவு விடுதி நடத்தி வருகிறார் என்றும், இரண்டு மாதங்களுக்கு முன்பு செந்தில்மெஸ் என்ற பெயரை மாற்றி கொங்குநாட்டு தோட்டத்து விருந்து என்ற பெயரில் விடுதி நடத்தி வருகிறார் என்றும், மாநகராட்சியில் உரிமம் மறுக்கப்பட்ட நிலையிலும் தொடர்ந்து நடந்தி வருகிறார் என்றும் தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கு W.P. No. 29936 of 2019 ன் விசாரணைகள் முடிவடைந்து 13.11.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது:-

"In the light of the above facts and circumstances and the reasons assigned, this court is passing the following order.

(a) The writ petition is disposed of and the sixth respondent is directed not to run the restaurant / hotel / retreatery, till the disposal of the statutory appeal / revision said to have been preferred before the Appellate Authority.
(b) The jurisdictional TANGEDCO officials are directed to disconnect the electricity connection granted to the premises at AB 125, 4th Avenue, Anna Nagar, Chennai 600 040, where the sixth respondent is running his retreatery / hotel, till the disposal of the statutory appeal / revision.
(c) The respondents 1 to 4 as well as TANGEDCO, depending upon the result of the statutory appeal / special revision said to have been preferred by the sixth respondent before the Appellate Authority shall take immediate and necessary steps in accordance with law and act accordingly as expeditiously as possible.
(d) The Appellate Authority shall accord / priority and dispose of the appeal / statutory revision dated 4.6.2018 filed by the sixth respondent, pending on its file, in accordance with law as expeditiously as possible."

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திரு. L.B. செந்தில்குமார் உரிய கட்டிட அனுமதியின்றியும், விதிமீறியும், வழக்கிற்குட்பட்ட அடுக்குமாடி கட்டிடத்தின் இதர மூன்று உரிமையாளர்களுக்கு உரிமையான பிரிக்கப்படாத பொது இடத்தில் இரண்டு மாடி கட்டியுள்ளார் என்பதும், மேற்படி கட்டிடத்தில் மாநகராட்சியால் உரிமம் மறுக்கப்பட்ட நிலையிலும், உரிய உரிமம் ஏதுமின்றி கொங்குநாட்டு தோட்டத்து விருந்து என்ற பெயரில் உணவு விடுதி நடத்தி வருகிறார் என்பதும் அறிக்கைகள் மற்றும் விசாரணைகள் வாயிலாக உறுதியாகிறது. மேலும், மாண்பமை சென்னை

உயர்நீதிமன்றம், முறையீட்டு மனுதாரரால் தொடுக்கப்பட்ட W.P.No. 29936 of 2019-ல், 13.11.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் (1) இவ்வழக்கின் 6வது பிரதிவாதி திரு. செந்தில்குமாரின் மேல் முறையீடு முடிவாகும் வரை உணவு விடுதி / ஓட்டல் ஏதும் நடத்தக் கூடாது என்றும், (2) சென்னை -600 040, அண்ணாநகர் 4வது அவின்யூ, எண். AB-125 என்ற முகவரியில் திரு. செந்தில்குமார் 6வது பிரதிவாதி நடத்திவரும் உணவு விடுதி கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட மின்இணைப்பை சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழக (Tamil Nadu Generation and Distribution Corporation) அலுவலர்கள், திரு. செந்தில்குமார், 6வது பிரதிவாதியின் மேல் முறையீடு முடிவாகும் வரை துண்டிக்க வேண்டும் என்றும் (3) பிரதிவாதிகள் 1 முதல் 4 மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம், 6வது பிரதிவாதியின் மேல்முறையீட்டின் முடிவிற்கேற்ப, உடனடி தேவையான சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், (4) மேல் முறையீட்டு அமைப்பு (Appellate Authority), 6வது பிரதிவாதியின் 4.6.2018 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை முன்னுரிமை அளித்து விரைந்து முடிக்க சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் மனு மீது உரிய நடவடிக்கை உரிய காலத்தில் மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கவில்லை என்பதால் முறையீட்டு மனுதாரர் நீதிமன்றத்தை நாடியுள்ளார். குற்றம்சாட்டப்பட்டுள்ள திரு. செந்தில்குமார் அனுமதியின்றி மேற்படி குடியிருப்பின் உரிமைதாரர்களுக்கு உரிமையான பிரிக்கப்படாத பகுதியில் (Undivided share) எந்தவிதமான கட்டட அனுமதியும் பெறாமல் இரண்டு மாடி கட்டடம் கட்டியுள்ளார். மாநகராட்சி அலுவலர்கள் சட்டப்படியான நடவடிக்கை எடுக்காமல் கட்டிடதாரர் இரண்டு மாடிகள் கட்டும்வரை அனுமதித்து அவருக்கு சாதகமாக செயல்பட்டுள்ளார்கள். திரு. செந்தில்குமார் குடியிருப்பு பகுதியென வகைப்பாடு செய்யப்பட்ட பகுதியில் வணிக பயன்பாட்டிற்கான கட்டிடம் கட்டி உணவு விடுதி நடத்த உரிமம் கோரியதின் அடிப்படையில், மாநகராட்சியால் உரிமம் வழங்க மறுக்கப்பட்ட நிலையில் வேறு பெயரில் உணவு விடுதி புதிதாக துவக்கி நடத்தி வந்துள்ளார். ஆனால் மாநகராட்சி அலுவலர்களால் தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் W.P.No.29570/2017-ல் வழங்கிய தீர்ப்புரையில், OA.No.1144/2017 in C.S.No. 889/2017 நாள்:14.11.2017 தீர்ப்பில் பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையிலான அலுவலர்கள் பிரதிவாதியாக இல்லாத நிலையிலும், வழக்கின் தீர்ப்புரை தெரிய வரும் நிலையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மாண்பமை நீதிமன்றத்தின் மாண்பை மதித்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு செயல்படாதது நீதிமன்ற அவமதிப்பிற்குரியது என கண்டித்துள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண். 111 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (U.D.4) (3) துறை, நாள் 22.6.2017-ல் கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

"Filing an application for exemption under these regulations will not in any way prevent the competent authority from taking action under any of the provisions of the Act, unless otherwise ordered so by the competent authority".

எனவே, இந்நேர்வில், முற்றிலும் குடியிருப்பு பகுதிக்கென வகைப்பாடு செய்யப்பட்டுள்ள குடியிருப்பு பகுதியில் வணிக பயன்பாட்டிற்கான கட்டிடம் கட்டி உணவு விடுதி நடத்தி, பாதுகாப்பற்ற நிலையில் தீ விபத்துக்கள் போன்ற அசம்பாவிதமான நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள நிலையிலும் பெருநகர மாநகராட்சியால் உணவு விடுதி துவங்கிட அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக செயல்பட்ட சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும்

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் வகைப்பாட்டிற்கு மாறாக குடியிருப்பு வகைப்பாடுப் பகுதியில் வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கட்டடங்களை கண்டறிந்து உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவும் மற்றும் குடியிருப்பிற்கென கட்டிட அனுமதி பெற்று வணிகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கட்டிடங்களை கண்டறிந்து மாநகராட்சிக்கு நிதி இழப்புகள் ஏற்படாதவாறு சட்டவிதிகளின்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல உதவி ஆணையர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி. A.R. சுஜாதா,
   எண். AB 123, சாந்தி காலனி,
   அண்ணாநகர், சென்னை 600 040.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 08,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   புல்லா அவின்யூ, எண். 36பி, 2வது குறுக்கு தெரு,
   ஷெனாய் நகர், சென்னை 600 030.

3. செயற்பொறியாளர்,
   மண்டலம் -08,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண். 36பி, 2வது குறுக்குத் தெரு,
   புல்லா அவின்யூ, ஷெனாய் நகர்,
   சென்னை – 600 030.

4. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை -600 003.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்